www.tamilarangam.net



# பிரபாகரனின் துரோகத்தனம்

தமிழீழ விடுதலைப்போராட்டம் பல இழப்புகள் தியாகங்களுக்கூடாக உச்சகட்டத்தை அடைந்த நிலையில். தலைமைப்பதவியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட வே.பிரபாகரனின் துரோகத் தனம். எமது இயககத்துக்குள்ளேயே நூற்றுக் கணக்கான போராளிகளையும் பலியெடுத்தும். பலியெடுத்துக்கொண்டும் இருக்கின்ற நிலைமையை உருவாக்கிவிட்டது. போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் தலமை வெறி கொண்ட பிரபாகரனின் துரோகநடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுத்தவர்கள் உயிருடன் இருந்ததே இல்லை. இலங்கை அரசு அழித்தொழித்த தமிழர்களின் தொகையளவே இவர்களால் அழிக்கப்பட்ட தமிழர்களின் தொகை என கணக்கிடப்படலாம். இவரது ஆரம்பகால இயக்கச்செயற்பாடுகளை துரோகத்திலிருந்து ஆரம்பமானதுதான்.

- பற்குனம். மைக்கல் என்ற சகேபோராளிகளை கொன்றமை.
- தங்கத்துரை. குட்டிமணி ஆகியோரை சிறீலங்கா அரசுக்குக் காட்டிக்கொடுத்தமை.
- செல்லக்கிளியை ஒழித்திருந்து கொலைசெய்தது( இராணுவதாக்குதலின்போது)
- செட்டியைச் சுட்டுக்கொன்றது.
- மன்னார் பொறுப்பாளர் விக்ரரை பின்னுலிருந்து துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது.
- குமரப்பா புலேந்திரனுடன் 10போராளிகளுக்கு சயனைட் கொடுத்து கொன்றமை.
- கிட்டுவை இந்திய இராணுவத்திற்குக் காட்டிக் கொடுத்தமை.

இப்படிப் பலப்பல.......... எண்ணிலடங்காதவை

இயக்கம் என்பது இவரது சொந்த வீடு போலத்தான் பாவிக்கப்பட்டது. இவ்வளவு தொகையான மக்களின் பணமும். போராளிகள் உயிர்களும் இவரது பதவி வெறிக்காகப் பாவிக்கப்பட்டது. இயக்கத்தில் உள்ளவர்கள் திருமணம் செய்யக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்து. காதலித்தவர்களை மண்ணுக்குள் புதைத்த இதே "தலைவன்" தான் ஒருத்தியை விரும்பியதும்( மதிவதனி)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தக்கட்டுப்பாடுகளை நீக்கினுன். முருகானந்தம் என்ற ரெலோ உறுப்பினர் ஒருவரின் காதலியை இந்தியாவில்வைத்து வற்புறுத்தி திருமணம் செய்துகொண்டார். இந்தியாவை எதிர்த்த இவர் இந்தியாவிடம் 50கோடிரூபா பணம் பெற்றுக்கொண்டார் பிரேமதாசாவிடம் இருந்து ஆயுதங்கள் பெற்றுக்கொண்டார். இஸ்ரேலிடம் இருந்து பயிற்சி பெற்றுக் கொண்டார்.

காலத்துக்காலம் இந்தக்துரோகத்தனங்களைப் பொறுத்துக்கொண்டும். தமிழ்மக்களின் விடுதலைக்காக உழைக்கவேண்டும் என்றே மாத்தையா. யோகி போன்ற எமது உண்மைத்தலைவர்கள் இயக்கத்திற்குள் இருந்தார்கள். பாலசிங்கம் -பிரபா கூட்டை அடிக்கடி விமர்சித்தார்கள். இயக்கத்தை சரியான பாதையை நோக்கி வழிநடத்தமுற்பட்டார்கள். தமிழீழத்தைவிட தனது தலைமையே முக்கியம் எனக்கருதும் பிரபா இயக்கத்திற்காக ஆக்கபூர்வமாக எந்த வேலையும் செய்யவில்லை உண்மையாகஉழைத்த 300இற்கும் மேற்பட்ட போராளிகள் மாத்தையா (சிறீ) யோகி ஆகியோகள் எங்கே என்று தெரியாத நிலையில் உள்ளனர் அன்னிய சக்திகளின் கைக்கூலியாகிவிட்ட பிரபாவிற்கு எதிராக இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தலைவர் மாத்தையாவின் ஆதரவாளர்கள் உள்ளனர். பிரபாகரன் இல்லாத ஒரு உண்மையான போராட்டம் நிகழ்தப்படும். அதுவரைக்கும் பிரபாகரனின் துரோகத்தலைமைக்கு ஆதரவான சகல பத்திரிகைகள். ஸ்தாபனங்கள். தனிநபர்களுக்கு எதிராக எம்மால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நூற்றுக்கணக்கான உண்மையான போராளிகளின் வாழ்கைக்காகவும் மக்களுக்காகவும் கடசிவரைக்கும் போராடுவோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

**பிரச்சாரப்பிரிவு(மாத்தையா குழு)**